# அக்டோபர் மாத ஆராதனை ஒழுங்குகள்

| நாள் | நேரம் | தலைப்பு | வேதபாடங்கள் | செய்தியளிப்பவர் |
|---|---|---|---|---|
| 01.10.2016 சனி | காலை 5.30 மணி | வாக்குத்தத்த ஆராதனை | - - | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 02.10.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | திருவிருந்து ஆராதனை குடும்பம் | ஏசாயா 16:1-11 மத் 5: 1 - 10 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 09.10.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | உடல் மனம் சார்ந்த மாற்று திறனாளி | II சாமு 9:1-13 மாற்கு 3 :1 -16 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |
| 16.10.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | விடுதலை ஞாயிறு | எசே 37:1 - 14 லூக்கா 4:16 - 19 | திரு. பால் பன்னீர் செல்வம் |
| 23.10.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | ஆண்டவரின் வருகையும் நீதித் தீர்ப்பும் | ஆதி 19:14 - 25 மத் 25:31 - 46 | திரு. ஜோசப் |
| 28.10.2016 ஞாயிறு | காலை 8.30 மணி | சீர்திருத்த ஞாயிறு | யாத் 7:1 -7 யோ 19: 33 - 38 | அருள்திரு. டேனியல் செல்லதுரை |

## அக்டோபர் மாதம் - 2016

# ஆயர்மடல்

அருமை திருச்சபை குடும்பத்திற்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் என் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். இம்மாதம் ஆசீர்வாதமாக அமைவதற்கு இறைவன் அருள் புரிவாராக.

நமது திருச்சபையின் பல்வேறு எதிர்கால நலத்திட்டங்களை நினைத்து திருச்சபையின் வளர்ச்சியிலும் இறைமக்களின் ஆவிக்குரிய மறுமலர்ச்சியிலும் பூரணமாக வளர நம்மை ஈடுபடுத்திக் கொள்வதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்மில் செயல்பட ஆசீர்வாதத்தோடு நம்மை ஒப்புவிக்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். ஐக்கிய குழுக்களும் மற்ற சங்கங்களும் திருச்சபையினுடைய ஆவிக்குரிய அமைப்பு வளர்ச்சிக்கும் அமைப்பின் எதிர்கால திட்டங்களுக்கும் நீங்கள் உதாரத்துவத்தோடு ஈடுபடுவது மட்டுமல்ல, உங்கள் அனுதின ஜெபங்களில் தனித்தனியாக, குடும்பம் குடும்பமாக ஈடுபடுவது இன்றியமையாதது என்பதை ஆழ்ந்த அனுபவத்தோடு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். நமது திருச்சபையின் சேகர குழுவாக, திருச்சபையின் அமைப்புக்கும் எதிர்காலத்தின் முன்னேற்றத்திற்கும் ஆர்வத்தோடு சிந்தித்து தங்களை ஆதாரப்பூர்வாமான செயல்களில் ஈடுபட பரிந்துரை செய்யப்படுகிறது. வளர்ச்சிக்கு ஒவ்வொரு தனிப்பட்ட குடும்பமும், ஆத்துமாவும் ஜெப வாஞ்சையுடன் திருச்சபையின் மொத்த வளர்ச்சியில் ஆர்வத்தோடு ஈடுபட உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடந்த மாதம் நடைபெற்ற நமது திருச்சபையின் ஊழியங்களில் திரளாய் பங்கு பெற்றதற்காக என்னுடைய நன்றி களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதம் முழுவதும் நடைபெறும் ஊழியங்களில் அனைவரையும் ஈடுபடுத்தி கொள்ள அழைக்கப்படுகிறீர்கள். ஜெபியுங்கள், பங்கு பெறுங்கள், பகிர்ந்து கொடுங்கள், கடவுளின் ஆசி என்றென்றும் தங்குவதாக

ஆண்டவரின் அருட்பணியில்

**Rev.Daniel Chelladurai**

## கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு

## பாமாலை .384

### யுத்தம் செய்வோம், வாரும், கிறிஸ்து வீரரே

**(Onward, Christian Soldiers)**

இரண்டாம் உலக மகா யுத்தம் நடந்துக் கொண்டிருக்கும் போது 1941 – ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், 10–ஆம் தேதி, கனடா நாட்டுக்குக் கிழக்கிலிருக்கும் நியுபவுண்ட்லந்து தீவுக்கருகில், ‘பிரின்ஸ் ஆப் வேல்ஸ்’ என்னும் போர்க் கப்பலின் மேல் தட்டில், பிரிட்டிஸ் பிரதமர், வின்ஸ்டன் சர்ச்சிலும், அமெரிக்கா ஜனாதிபதி ரூஸ்வெல்டும், இரு நாடுகளின் கப்பற்படையினருடன்,ஞாயிறு காலையில், காலை ஆராதனைக்காக அணிவகுத்து நின்றனர். அவ்வாராதனையில் சர்ச்சிலின் வேண்டுகோளுக்கிணங்கி ‘யுத்தம் செய்வோம், வாரும்’ என்னும் பாடல் எல்லோராலும் மிக உற்சாகத்துடன் பாடப்பட்டது. இச்சந்திப்பில்தான், ‘அட்லான்டிக் சாசனம்’ வகுக்கப்பட்டது. இப்பாடலைப் பாடும்போது கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்காகவும், கடவுளின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும், இரு கிறிஸ்தவ நாடுகளுக்கும் மேலோகிலிருந்து எக்காளத்தொனி உண்டானது போல் தனக்குத் தோன்றியது என சர்ச்சில் கூறியுள்ளார்.

இப்பாடலை எழுதிய பாரிங் கூல்டு போதகர், ஆங்கிலச் சபையைச் சேர்ந்தவர். அவர் இங்கிலாந்தில், டெவான்ஷயர் என்னுமிடத்தில் 1834–ஆம் ஆண்டு பிரபுக்கள் மரபில் பிறந்தார். தனது தந்தைக்கு மூத்த குமாரனாதலால் திரண்ட ஆஸ்தியைப் பெற்று, சொகுசாக வாழ்ந்து வந்தார். ஆயினும், ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணைக் காதலித்து அவளையே மணந்து கொண்டார். பின்னர் குருப்பட்டம் பெற்று, பல சபைகளில் திருப்பணியாற்றினார். சில ஆண்டுகளுக்குப்பின், அவர் யார்க்ஷயர் மாகாணத்திலுள்ள ஹார்பரி கிராமத்தில் போதகராக ஊழியம் செய்ய நியமனம் பெற்றார்.



அச்சபையில் பரிசுத்தாவியின் திருநாளுக்கு அடுத்த நாளாகிய திங்கள் (White Monday) சிறுவர்களின் விழாவாகக் கொண்டாடப்படுவது வழக்கம். அன்றையத்தினம் ஊரிலுள்ள சிறுவர்கள் யாவரும் நல்ல ஆடைகள் அணிந்து, கொடிகளைப் பிடித்து, பாட்டுப் பாடிக்கொண்டு, தெரு தெருவாக ஊர்வலம் வருவார்கள். ஊர்வலத்தில் பாடுவதற்கேற்ற பாடல்களைத் தேர்ந்தெடுக்க, பாரிங் கூல்டு போதகர் கேட்டுக் கொள்ளப்படவே, அவர் பல பாட்டுப் புத்தகங்களில் தேடிப்பார்த்தார். ஆனால் அவற்றிலிருந்த பாடல்கள் ஒன்றும் அவருக்குத் திருப்தியாகத் தோன்றவில்லை. ஆகவே அவர் தாமே ஒரு பாடலை எழுதத் தீர்மானித்து, ‘யுத்தம் செய்வோம், வாரும்’, என்னும் பாடலை எழுதினார். இளைஞர்கள் கிறிஸ்துவுக்காகப் போர் செய்யச் செல்லும் வீரர்கள் என்னும் எண்ணத்தோடு எழுதப்பட்டது. மறுநாள் இப்பாடலை மிகவும் உற்சாகத்தோடு பாடிக் கொண்டு ஹார்பரிச் சிறுவர்கள்ஊர்வலம் சென்றனர். இப்பாடல் ஹார்பரியில் நடந்த ஊர்வலத்துக்காக எழுதப்பட்டிருந்தாலும், இப்போது உலகமெங்கும் கிறிஸ்தவச் சிறுவர்களின் அணிவகுப்புப் பாடலாகப் பல மொழிகளில் பாடப்பட்டு வருகிறது. இப்பாடலின் சிறந்த மதிப்பிற்கு அதன் இராகம் ஒரு முக்கிய காரணமாகும். ‘St. Gertrude’ எனப்படும் இவ்விராகம், ஸர். ஆர்தர் சல்லிவன் என்னும் சங்கீத நிபுணரால் இயற்றப்பட்டது.

பாரிங் கூல்டு போதகர் ஒரு சிறந்த எழுத்தாளர். அவர் ஏராளமான பாடல்களும், செய்யுள்களும், கட்டுரைகளும் எழுதியுள்ளார். அவர் எழுதிய இதர பாடல்களில் பிரபலமானவை:

“துக்கம், திகில், இருள் சுழ’ – பாமாலை 382

“உயிர்த்தெழும்பும் காலை தன்னில்’ – பாமாலை 396

‘Now, the day is over’ - S.S. 296

அவர் 1924 – ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 2–ம் தேதி தமது 90–ஆம் வயதில் காலமானார்.

**- Nishada’s**

ஆதாரம்:

1.கிறிஸ்தவ கீதங்களின் வரலாறு – **Mr.D.EBENKAN**

2. Various internet articles

# கீதங்களை புரிந்து பாடலாமா?
# திரிமுதல் கிருபாசனனே

கீர்த்தனை எண். 2

**சங்கராபரணம்** **ஆதிதாளம்**

1. திரி முதல் கிருபாசனனே, சரணம்
ஜெக தல ரட்சக தேவா, சரணம்
தினம் அனுதினம் சரணம், கடாட்சி
தினம் அனுதினம் சரணம், சருவேசா
2. நலம் வளர் ஏக திரித்துவா, சரணம்
நமஸ்கரி உம்பர்கள் நாதா, சரணம்
நம்பினேன் இது தருணம், தருணம்
நம்பினேன் தினம் சரணம் – சருவேசா
3. அருவுருவே, அருளாசே, சரணம்
அன்று மின்று மென்றும் உள்ளாய் சரணம்
அதிகுணனே, தருணம் – கிரணமொளிர்
அருள்வடிவே, சரணம் – சரவேசா
4. உலகிட மேவிய உனதா – சரணம்
ஓர் கிருபாசன ஒளியே, சரணம்
ஒளி அருள்வாய், தருணம் –
மனுவோர்க்கு உத்தமனே, சரணம் – சருவேசா,

ஆசிரியர் : **தஞ்சை சத்தியநாதன் பிள்ளை , உபதேசியார்**

அவர்களின் பிறப்பு, இறப்பு, பணியிடம் முதலியன கிடைத்தில, ஆயினும், திருப்பத்தூர் டாக்டர். ஏசுநாதன் அவர்களின் ஆசிரமப் பாமாலையில் 'உபதேசியார்' எனக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்தவத் திருப்பணியில் உபதேசியாரின் பொறுப்பு மிகவும் சிறப்பாகும். தன்னைப் பேராசிரியர் என்பதைவிட உபதேசியார் எனக் கூறிப் பெருமைப்படுவதை "ஆதிப்பிதா குமாரன்" என்னும் கீர்த்தனையின் ஆசிரியர் காபிரியேல் மூலம் அறிகிறோம். இவர் பாளையங்கோட்டை சாராடக்கர் கல்லூரியில் பேராசிரியர். ஒவ்வொரு உபதேசியாரின் வாழ்க்கைத்தரமும் சிறப்புடையதாக இருக்க வேண்டுமென்றோ? இக்கீர்த்தனை சங்கராபரணம் இராகத்தில் ஆதிதாளத்தில் மிக உருக்கமாக பக்தி உணர்வோடு பாடவேண்டியதாகும். பைரவி இராகத்தில் தோத்திரம் செய்வேனே, சரணம் நம்பினேன் ஏசுநாதா, ஆலய பிரதிஷ்டையின்போது பாடும் தேவனே யேசுநாதனே ஆகிய இவரின் 6 பாடல்கள் CLS-இல் இடம்பெற்றுள்ளன.

மெட்டு : (சீர்மிகு வான்புவி தேவா தோத்திரம் – 6 ஆம் பாடல்)



**சரணம் 1** : கிருபை தமது (ஆசனம்) இருப்பிடமாகக் கொண்டுள்ள திரியோகக் கடவுளுக்கு சரணம் செய்கிறார். அடுத்து என் ரட்சகர் என்று தன்னிலைப்படுத்தாது, உலக ரட்சகர் (ஜெகதல) எனவும், அவரை அனுதினமும் சரணம் செய்ய வேண்டும் எனவும் விளக்குகிறார்.

**சரணம் 2** : நன்மையளிக்கின்ற திரியேகக் கடவுளை (நமஸ்கரி உம்பர்கள்) வான தூதர்கள் வணங்குகின்ற உம்மை இப்போதே நம்பி (தினம் சரணம்) ஒவ்வொரு நாளும் வணங்குகிறேன். (இது தரும்) இதுவே சமயம்.

**சரணம் 3** : (அருஉரு) உருவமற்ற (அருளரசே) இரக்கத்தின் – தயவின் தலைவா நேற்றும் இன்றும் நாளையும் நிலைத்திருக்கும் நித்தியனே நற்குணனே ஒளிமிக்க அருள் வடிவான (சர்வேசா) சர்வ ஈஸ்வரனே உமக்கு சரணம் என்றும் (அதிகுணனே) சிறந்த நற்குணமுடையவனே (கிரணமொளிர்) கதிரொளியே சரணம்.

**சரணம் 4** : உலகுக்கு வந்த கிறிஸ்துவானவர் (உனதா) உயர்வானவர் கிருபையை தம்மிருப்பிடமாகவும் மனிதருக்கு தம் ஒளியை அருள்பவர் என்றும் விளக்குகிறார். ஏதோ காரணத்தினால் விடப்பட்ட 5 ஆம் சரணத்தைக் கீழே காண்போம்.

நித்திய தோத்திர நிமலா – சரணம்
நிதி இஸ்ரேலரின் அதிபதி சரணம்
நீதா, இது தரிசனம் – கிருபைக்கொரு
ஆதாரா சரணம், சருவேசா

(நித்திய தோத்திர நிமலா) நிர்+மலா – பாவம் இல்லாத என்றும் துதிக்கப்படத்தக்க தூயவரே (சரணம்) உம்பாதங்களை வணங்குகிறேன். (நிதி இஸ்ரேலரின் அதிபதி சரணம்) இஸ்ரேலரின்) யூதரின் அரசர்க்கு சரணம். (நீதா) நீதியுள்ளவரே இது தருணம் (கிருபைக்கொரு ஆதாரா சரணம்) உம் கிருபையை ஆதாரமாக நம்பி வாழும் எங்களுக்கு கிருபையளிக்க இதுவே தருணம் எனப்பாடுகிறார்.

**குறிப்பு :** சரணங்களின் அடிமோனையும், பொழிப்பு மோனையும், சரணம் என முடியும் இயைபுத் தொடையும் யாப்பின் சிறப்பை விளக்கும்.

ஆதாரம்: கீர்த்தனை புதையல், CLC Publications

# வேத வினா - விடை போட்டி

**அக்டோபர் மாத கேள்விகள்**

**( வசன ஆதாரம் தரவும் )**

**I பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| I. | தாவீது | a. | கிணறு |
| ii. | அரேத்தா | b. | செங்குத்ததன பாறை |
| iii. | சீமாத் | c. | எத்தியோப்பியன் |
| iv. | ரொகேல் | d. | அம்மோனியர் |
| v | செல்சாகு | e | கூடாரங்கள் |
| vi | சேனே | f | ஆயததாரி |
| vii | கூஷான் | g | இருப்புக்காளலாய் |
| viii | ஆராத் | h | ராகேல் |
| ix | எகிப்து | i | ராஜா |
| x | சேரா | j | கானானிய ராஜா |

**விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 20-10-2016**

<u>விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி</u>


**C.S.I. இயேசுவில் புதுவாழ்வு ஆலயம்**

எண் 55, 3வது மனை பிரிவு,
ஆசிரியர் குடியிருப்பு,
லட்சுமிபுரம், சென்னை – 600 099.


குறிப்பு: தெளிவான முகவரியுடன்
சந்தா எண்ணையும் சேர்த்து எழுதி அனுப்பவும்


csinewlifeinjesus@gmail.com 9444 633129

**www.csinewlifeinjesus.org**


**வாழ்த்துகிறோம்**

செப்டம்பர் 17 அன்று திருமணத்தில் இனைக்கப்பட்ட
திரு. எபினேசர் – திருமதி அனிதா அவர்களை
திருச்சபையராக வாழ்த்துகிறோம்.



# சென்ற மாத போட்டியின் விடைகள்

| | | |
|---|---|---|
| 1. | தரித்திரம் | நீதி 6:9 – 11 |
| 2. | அறுப்புண்டு போகுதல் | லேவி 20: 6 |
| 3. | நரக அக்கனி | யாக்கோபு 3: 16 |
| 4. | ஆஸ்தீயை அழிக்கிறான் | லூக்கா 15:30 |
| 5. | கெட்டுப் போகுதல் | எபிரேயர் 10: 39 |
| 6. | நியாதிபதிகள் | 18: 6 |
| 7. | I இராஜக்கள் | 1: 53 |
| 8. | II சாமுவேல் | 5: 6 |
| 9. | நெகேமியா | 2: 19 |
| 10. | ஆதியாகமம் | 32:13 – 18 |

## சரியான விடை எழுதியவர்கள்

1. திருமதி. எஸ்தர் சந்தோஷ்ராஜ்
2. திருமதி. கலா சுந்தரகுமார்
3. திருமதி. ஜாய்ஸி விமலா
4. திருமதி. லீலா டிக்சன்
5. திருமதி. ஜூபிலி தர்மராஜ்
6. திருமதி. ஸ்விட்டிலீன் ரிச்சர்ட்
7. திருமதி. ரோஸ்லெட் செல்லன்

## படித்ததில் பிடித்தது

**யாரிடம் எப்படி பேச வேண்டும்?**

தாயிடம் அன்பாக பேசவேண்டும்.
தந்தையிடம் பண்பாக பேச வேண்டும்.
சகோதரியிடம் பாசமாக பேச வேண்டும்.
சகோதரனிடம் அளவாக பேச வேண்டும்.
குழந்தைகளிடம் செல்லமாக பேச வேண்டும்.
கடவுளிடம் மவுனமாக பேச வேண்டும்.
நண்பர்களிடம் மனம் விட்டு பேச வேண்டும்.

**எப்போதும் பேசுங்கள்**
**பிறர் மனம் புண்படாதவாறு...**

Editor **A.Joseph**

# BIRTHDAYS IN THE MONTH OF OCTOBER

| | | | |
|---|---|---|---|
| October 2 | Mr. A.Alwin Jackson | October 15 | Mr.Franklin Valsan |
| October 3 | Mr.J. Jerald Doublas | | Master.D.A.Calvin Sundar Raj |
| | Master. Samuel Jabez | October 16 | Mrs.Sumi Premila |
| October 4 | Mr.W.Arun Santhosh | October 17 | Mrs.Divya Rani |
| October 6 | Mrs.C.R.Geetha | | Mr.Immanuel George |
| | Mrs.P.Hasheela John | October 18 | Mrs.Priscilla Hepsibah |
| October 7 | Mr.B.Abraham Ronaldo | | Mr.E.Jebakumar |
| | Mr.V.R.Freddy Paul Raja | October 19 | Mrs.Letticia Rebecca |
| | Mrs.Anitha David | | Master.D.Caleb Joel |
| October 8 | Mr.Ruskin | October 20 | Miss.Aksa Laurus |
| | Mrs.Grace | October 21 | Mr.S.Suresh Kumar |
| | Miss.Bettina Samuel | | Mrs.Leema Rose |
| | Mr.Samson Daniel | October 23 | Mrs.Emily Shanthi Jacob |
| | Mrs.Rajala Sam | October 25 | Master.Paul Magesh |
| October 9 | Mrs.Kalaiselvi | | Mr.Titus Jacob |
| | Miss.J.J.Daphney Gethsi Bennita | | Mrs.Usha Joseph |
| | Mrs.Kalai Chelvi Chandru | | Miss.D.Merlin Lydia |
| October 10 | Mr.R.Rohit Gladson | October 26 | Vinosha Sweety |
| October 11 | Mr.Titus Jacob | | Mrs.C.R.Sweetlyn Jeba |
| October 13 | Miss.R.Tryphaena | October 27 | Mrs.Sarojini Prince |
| | Mrs.Esther Rajeshwari | October 28 | Master.R.J.Roshan Raja |
| October 14 | Mrs.T.Jeyanthi Jeyaseelan | | Master.J.Jubal Sam |
| | Mr.G.Abraham Kingslin | October 30 | Mrs.P.Selvamani |
| | Miss.J.Esther Pauline Rani | October 31 | Mrs.Percy Gnana Rupa |
| October 15 | Mr.G.Richard Murgesan | | Mrs.Y.Sukhi |
| | | | Miss.M.B.Aldrich Joshan |

# WEDDING DAYS IN OCTOBER

October 3 Mr.D.Selvaraj & Mrs.Annie Pushpam
October 6 Mr.T.Mohan Kumar & Mrs.C.R Blesslin Sheeba
October 10 Mr.S.Michael Babu & Mrs.B.Anjel Sathya
October 14 Mr.I.Solomon Rufus & Mrs.Mary Grace Angeline
October 21 Mr.E.Titus Jacob &Mrs.T.Annamal Grace
October 22 Mr.T.N.Blessin & Mrs. Jasmine J.Nainita
October 29 Mr.Manoj Kumar Joseph & Mrs.Ilakiya



**பிறந்த நாள் மற்றும்**
**திருமண நாள் கொண்டாடும்**
**அனைவருக்கும் திருச்சபையின் சார்பில்**
**வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்!**



# திருச்சபையும் - நற்செய்தி பணியும்

ரிச்சர்ட் உம்பிரான்ட்



1909 - 2001

## வேதனையில் வரும் வெற்றி

ருமேனியா நாடு கம்யூனிச கொள்கை தலைவிரித்தாடிய சமயம். கிறிஸ்தவர்கள் மிகவும் துன்புறுத்தப்பட்டார்கள். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத அளவு சித்தரவதைகளை அனுபவித்தனர்.

பல கிறிஸ்தவ சபைகள் கம்யூனிச ஆட்சிக்கு இணங்கி செயலற்றுப் போயின. இக்கட்டான சூழ்நிலை எங்கும் நிலவியது. அச்சமயத்தில் சிங்கமெனச் சீறி எழுந்தார் ரிச்சர்ட் உம்பிரான்ட்.

திருச்சபையை பாதுகாக்கும் எண்ணத்திலும், மக்களை விசுவாசத்தில் நிலைக்கச் செய்யும் முயற்சியிலும் விறுவிறுப்பாகச் செயல்பட்டார். இரகசியமாக பாதாள ஆலயம் ஒன்றை ஏற்படுத்தினார். மக்கள் கூட்டம் நிறைந்தது. உலக பயங்கள் அனைத்தும் அவர்களை உதறிவிட்டு ஓடியது.

ரிச்சர்டு ஒரு போதகராக செயல்பட்டார். மக்களுக்கு இரட்சிப்பின் நிச்சயத்தை அனுதினமும் கொடுத்துக் கொண்டிருந்தார். அஞ்ஞானத்தின் கொடுமைகளும் அதிகமானது. கம்யூனிசவாதிகள் கிறிஸ்தவர்களின் நிலங்களை அபகரித்து வந்தனர். வீடுகள் சிதைக்கப்பட்டன கிறிஸ்தவர்கள் தங்க வீடின்றி வீதிகளில் அலையும் அபாயமான நிலை ஏற்பட்டது.

1948ம் ஆண்டு. ரிச்சர்டு தம் பாதாளஆலயத்திற்கு போகும் வழியில் திடீரென ஒரு கும்பல் ரிச்சர்டை மடக்கிப் பிடித்தது. 8 ஆண்டுகள் சிறையில் கொடூரமான தண்டனைகளை அனுபவித்தார். அவர் இறந்து விட்டார் என்ற செய்தியே அவுரின் மனைவிக்கு சொல்லப்பட்டது. அந்நிலையிலும் அவர்கள் தேவனைத் துதித்துப் பாடினார்கள்.

கம்யூனிசம் நல்லது. கிறிஸ்தவம் முட்டாள்தனமானது என்ற வார்த்தைகளையே நாள்முழுவதும் கேட்கவேண்டியதிருந்தாலும் ரிச்சர்டு இயேசுவை போற்றி பாடுவதிலேயே உறுதியாயிருந்தார். பல கொடூரத்திற்குப் பிறகு விடுதலை செய்யப்பட்டு, மீண்டும் 25 வருடங்கள் சிறைத் தண்டனை பெற்றார்.

வேதப்புத்தகத்தை ருமேனியர்களுக்கு கொடுப்பதில் தீவிரம் காட்டி, கம்யூனிசவாதிகளுக்கு சிம்மச் சொப்பனமாக விளங்கிய ரிச்சர்டு தன் வாழ்நாளின் இறுதியில் இரத்தசாட்சியானார்.

அன்பரே! ரிச்சர்டு உம்பிரான்டை போல் விசுவாசத்தில் உறுதியாக நிற்கிறீர்களா?

தொகுப்பு
**EVA. பால் பன்னீர் செல்வம்**

## சிறப்புக் கட்டுரை

# தென்னிந்திய திருச்சபை உருவான வரலாறு

திருச்சபை வரலாற்றில் இரண்டாம் பெந்தேகோஸ்தே என்று அழைக்கப்படும் நிகழ்வு யாதெனில் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ம் நாள் சென்னையில் உள்ள தூய ஜார்ஜ் பேராலயத்தில் நிறுவப்பட்ட தென்னிந்திய திருச்சபையாகும்.

இவை உடனே நிறைவேறவில்லை ஆங்கிலிக்கன், மெத்தடிஸ்ட் சபைராளுகை மற்றும் மூப்பராளுகை சபைகள் இவ்வாறு இணைந்து தென்னிந்திய திருச்சபையாக உருவானதற்கு பின்னணியில் பல தொடர் முயற்சிகள், விவாதங்கள், தர்க்கங்கள், விட்டுக்கொடுப்புகள் போன்றவை காணப்பட்டன.

1850ல் முதன் முதலாக இந்தியாவிலுள்ள அனைத்துச்சபைகளிலும் ஒன்றிணைந்து ஒரே இறைவனின் திருப்பணியைச் செய்ய வேண்டும் என்று நற்செய்தி பணி சங்கங்கள் (Missionary Movements) சிந்திக்க தொடங்கின.

இச்சிந்தனையை 1855 கல்கத்தா , 1857 பெனாரஸ், 1858 உதகமண்டலம், 1862 லாகூர்,1872 அலகாபாத் 1879 சென்னை ஆகிய இடங்களில் நற்செய்தி பணி சங்கங்கள் தங்களின் மாமன்ற கூடுகையில் முன் வைத்து விவாதித்தனர். 1988ல் லன்டன் மாநகரில் நடைபெற்ற நற்செய்தி இயக்கங்களின் நூற்றாண்டு மாமன்ற கூடுகையில் பிறசபைகளை புரிந்து கொள்ளுதலும் ஒத்துழைப்பும் மற்றும் இந்தியாவில் கிறிஸ்துவின் சபை போன்ற கட்டுரைகள் வெளியிடப்பட்டு சிந்திக்கப்பட்டன.

இந்தியாவின் அரசியல் விடுதலை வேட்கையுணர்வில் இந்திய திருச்சபை தன்னையும் இணைத்துக் கொண்டதால் ஆன்மீக வாழ்விலும் விடுதலை உணர்வுடனான ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

திருச்சபைகளின் ஒருங்கிணைப்புடனான ஒரே இலக்கை நோக்கிய முன்னேற்றம் கானப்பட்டது. CLS, IMS, NMS, YMCA போன்ற அமைப்புகளின் வரவாலும் முயற்சியாலும் சபைகளின் ஒற்றுமை பற்றிய முயற்சிகள் தொடரப்பட்டன. மதிப்பிற்குரிய பேராயர். வி.எஸ்.அசரியா, கே.டி.பால், சி.ஜே.லூகாஸ், ஜே. சாண்டியகோ மற்றும் ஏ.ஜே.அப்பாசாமி போன்ற ஆன்மிக தலைவர்களின் முயற்சியாலும் MCC, WCC, UTC, Jaffna College போன்ற திருச்சபை நிறுவனங்களின் கூட்டு முயற்சியாலும் உழைப்பாலும் சபை ஐக்கிய முயற்சிகள் வலுப்பெற்றன. 1900 ஆம் எடின்பர்க் மாமன்ற கூடுகையில் ஒன்றிணைந்த ஒரே திருச்சபை என்ற கருத்து அதிகமாக பேசப்பட்டது. முதன் முதலில் 1901 ஆம் ஆண்டு ஆற்காடு மிஷன் மற்றும் ஸ்காட்லாந்து திருச்சபை மிஷன் ஆகிய இரண்டு மூப்பராளுகை சபைகள் ஒன்றினைந்தன. 1904-ல் சபையராளுகை பாரம்பரியத்தை சேர்ந்த மதுரை, யாழ்பான சபைகளும் திருவிதாங்கூர் திருச்சபைகளும் ஒன்றிணைந்தன.1908 சபையராளுகை மற்றும் மூப்பராளுகை சபைகள் ஒன்றிணைந்து தென்னிந்திய ஐக்கிய சபை உருவானது பேராயர் HENRY WHITE HEAD போன்ற தலைவர்கள் தம் அருள் உரைகளிலும், பேச்சுகளிலும் ஆங்கிலிக்கன் சபைகள் தென்னிந்திய ஐக்கிய சபை உடன் இணையும் முயற்சிகளை வலியுறுத்தினர் பல ஆண்டு இடைவெளிக்கு பிறகு 1919 தரங்கம்பாடியில் சபை ஐக்கியம் பற்றிய ஒரே சிறப்பு முறை சாரா கூட்டத்தில் லுத்தரன், மெத்தடிஸ்ட், ஆங்கிலிக்கன் ஆகியவை தென்னிந்திய ஐக்கிய சபைகளுடன் பங்கு பெற்றன. கோட்பாடு மற்றும் பற்றுமை வேறுபாடுகளில் லுத்தரன் திருச்சபைகள் தொடர்ந்து பங்கு பெற முடியாமல் பின் வாங்கின. ஆனால் இந்தோ, பர்மா , சிலோன் ஆகிய திருச்சபையான ஆங்கிலிக்கன் சபையும் ஐக்கிய சபையும் இனைவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

பேராயர். வி.எஸ்.அசரியா, அருட்திரு. வி. சாண்டியகோ அவர்கள் சீரிய முயற்சியாலும் தரங்கம்பாடி அறிக்கை வெளியிடப்பட்டது. அதன் விவாதங்கள் 1920, 1921, 1922, 1923, 1925 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்றது.1925ல் மெத்தடிஸ்டுகள் ஒரு ஒப்புரவாகுதலுக்கு முன் வந்தன.தரங்கம்படி அறிக்கையின் கடைசி கூட்டம் 1941 ஆம் ஆண்டு நடைபெற்றது. **கர்த்தரின் பெரிதான கிருபையால் 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 27ந் தேதி தென்னிந்திய திருச்சபை உருவானது.**

ஆக்கம் : **A.ஜோசப்**

வரலாறு தொடரும்.....

(பல்வேறு நூல்களின் அடிப்படையில் எழுதப்பட்டது)

## அறிவிப்பு

திருச்சபையின் முதியவர்கள் அனைவரும் வரும் நவம்பர் மாதம் முதல் வாரம் நவம்பர் 6, ஞாயிற்றுக்கிழமை அன்று சிறப்பு அன்பளிப்பை வழங்கி கவுரவிக்கப்படுவார்கள்.

குறிப்பு: திருச்சபை உறுப்பினர்கள் 60 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும். – ஆயர்

## *ஏன்? ஏன்?*

கிறிஸ்தவம் வளராததற்கு காரணம் ஜனங்கள் **கிறிஸ்துவை** பார்க்காமல் கிறிஸ்தவர்களை பார்ப்பது.

கிறிஸ்தவர்கள் வளராததற்கு காரணம் சிலுவையின் உபதேசத்தை கேட்காமல் ஆசிர்வாத உபதேசத்தை கேட்பது.

உபதேசம் வளராததற்கு காரணம் போதகர்கள் கிறிஸ்துவை பிரியபடுத்தாமல் கிறிஸ்தவர்களை பிரியபடுத்துவது.

## ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி

உண்மை என்ன?

ஐந்து பெற்றால் அரசனும் ஆண்டி என்பது ஐந்து பெண் மக்களைப் பெறுவதைக் குறிப்பதாக கூறுவார்கள். ஆனால் உண்மையில்

1. ஆடம்பரமாய் வாழும் தாய்.
2.பொறுப்பில்லாமல் வாழும் தந்தை.
3.ஒழுக்கமற்ற மனைவி.
4.ஏமாற்றுவதும் துரோகமும் செய்யக்கூடிய உடன் பிறந்தோர். மற்றும்
5.சொல் பேச்சு கேளாத பிடிவாதமுடைய பிள்ளைகள்.

ஆகிய ஐந்தும் இருந்தால் அரசனே ஆனாலும் கூட அவளது வாழ்க்கையே அழிவை நோக்கி போகும் என்பதுதான் உண்மையான பொருள்.